**திருகோணமலை நகர சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள் -

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருகோணமலை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட

மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு கொள்வனவு செய்யப்பட்ட, நன்கொடையாக கிடைக்கப் பெற்ற புத்தகங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 467,579 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 384,162 காட்டப்பட்டதால் ரூபா 83,417 தொகை குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | நிகழாண்டு இறுதிக்கணக்கில் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற புத்தகங்களின் பெறுமதியானது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடையாக பெற்ற சொத்துக்கள் கணக்கில் சேர்க்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு காலப்பகுதியில் லிங்கநகர் அரிசிமா பொதியிடல் தொழிற்சாலைக்காக உள்ளூராட்சி உதவி செயற்திட்டத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட 14 எண்ணிக்கையான கூட்டுமொத்தம் ரூபா 2,600,000 பெறுமதியான இயந்திர உபகரணங்கள், பொருத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | LDSP கருத்திட்டத் தினூடாக லிங்கநகர் அரைக்கும் ஆலைக்கான கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,600,000 பெறுமதியான இயந்திர உபகரணங்களின் பெறுமதி குறித்த நிதியாண்டுக்கான இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | இயந்திர உபகரணங்கள், பொருத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 14 ஆண்டுகளுக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் மின்சார சபை கையளிப்பு என காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 5,010,261 தொடர்பில் உரிய ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்விடயம் தொடர்பாக விளக்கங்கள் மின்சார சபையிடமிருந்து கிடைக்கப் பெற்றதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஆவணங்களைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்ட விசேட முற்பணக் கொடுப்பனவு நிலுவை ரூபா 1,041,246 தொடர்பில் உரிய ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விபரங்கள் கிடைக்கப் பெற்றதும் அதனை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | 15 ஆண்டுகளுக்கு மேலாக நிதிக்கூற்றில் சொத்தின் கீழ் காட்டப்பட்டு வருகின்ற அறவிடப்படாததான பயன்பாட்டு சேவைகள் ரூபா 110,137 தொடர்பில் உரிய ஆவணங்கள், பதிவேடுகள், உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்படாத பயன்பாட்டு சேவைகளுக்கான ஆவணங்கள் எதுவும் தற்போது அடையாளம் காணக்கூடிய நிலையில் இல்லை. எனவே இவ் ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதும் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் சான்றாதாரங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்** -

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1), (2),(3) | ஒப்பந்ததாரருக்கு மீளளிக்கப்பட வேண்டியிருந்த பிடிபணம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிடிபணங்கள் சரியான முறையில் பரிசீலிக்கப் பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கையினை துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| | 2018 சனவரி 24 ஆந் திகதியும் 05/2018 உள்ளூராட்சி - 01 ஆம் இலக்கமும் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான சுற்றறிக்கை | நிறுவன பணியாட்தொகுதியினர் பெற்றுக் கொள்ள வேண்டிய திறன் இடைவெளிகளை இனம் காணப்பட்டு நிறுவனத்திற்குரித்தான விசேட மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக் கவில்லை மற்றும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | நிகழாண்டில் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத் திடுவதற்கான நடவடிக்கையின் பொருட்டு முகாமையால் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 59,152,235 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 96,899,734 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 39,105,000 | 143,594,750 | 45,418,121 | 98,176,629 | 42,355,000 | 40,376,000 | 41,992,000 | 100,061,000 |
| (ii) | வாடகை | 32,320,000 | 83,764,504 | 29,818,993 | 53,945,511 | 36,570,000 | 28,925,000 | 20,727,000 | 45,623,000 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 18,783,460 | 23,504,203 | 22,736,968 | 767,235 | 12,668,000 | 19,124,000 | 19,124,000 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 17,423,000 | 172,415,963 | 92,113,921 | 80,302,042 | 14,330,000 | 11,038,000 | 6,038,000 | 33,212,000 |
| | கூட்டுத் தொகை | 107,631,460 | 423,279,420 | 190,088,003 | 233,191,417 | 105,923,000 | 99,463,000 | 87,881,000 | 178,896,000 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 88,514,106 ஆதனவரி நிலுவை அறவீடு செய்வதற்கு சபையினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலுவை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆதனவரி நிலுவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | 390 கடைக்கான வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 49,138,586 தொகை 13 வருடங்களாக அறவிடப்படவில்லை. | நீண்டகால நிலுவையிலுள்ள குத்தகைதாரர் களிடம் நிலுவை அறவிட விசேட கவனம் செலுத்தப் பட்டுள்ளது. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ii) நகரசபைக்கும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சுக்குமிடையிலான ஒப்பந்தத்திற்கமைய மீன் சந்தை கட்டடத்தொகுதியில் பெறும் இலாபத்தில் 30% சபைக்கு செலுத்தவேண்டும். இருப்பினும் 2014 தொடக்கம் மீளாய்வாண்டு வரை நிலுவைத்தொகை ரூபா 8,302,842 அறவிடப்படவில்லை. | நிலுவைத் தொகையினையும் எதிர்வரும் காலங்களில் விலை மதிப்பீட்டு திணைக்களத் தினால் நிர்ணயிக்கப்பட்ட மாதவாடகையினையும் வழங்குவதற்கு உடன்பட்டுள்ளனர். | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 வரையான காலப் பகுதியினுள் சபையின் நிர்வாக எல்லைக்குள் அசைவற்ற ஆதனங்களை கைமாற்றும் போது அறவிடப்பட்ட ரூபா 43,836,720 முத்திரைத் தீர்வைகளை கிழக்கு மாகாண திறைசேரியிடமிருந்து கோரிப் பெற்றுக்கொள்ள சபை தவறியமையினால் அத் தொகை மாகாண நிதியத்தின் வருமானமாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | நிலுவை முத்திரைக் கட்டணம் பெற நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரைத் தீர்வையை பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) நகரசபைக்குச் சொந்தமான காப்புறுதி செய்யப்படாத ஒரு வாகனம் 2023 ம் ஆண்டு விபத்துக்குள்ளான போதிலும் குறித்த விபத்து தொடர்பான பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை நிதி விதிமுறைக்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத் திருத்தம் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (ஆ) | நகராட்சி மன்றத்திற்குட்பட்ட இந்து மயானத்தில் தகனக் கிரிகைகளுக்காக பயன் படுத்தப்படுகின்ற இதுவரை பெறுமதி இனங்காணப் படாதுள்ள 06 எரிவாயுக்கள் (Gas slinder) மற்றும் வாகன இயந்திரம் போன்ற சொத்துக்கள் மீளாய்வாண்டு காலப்பகுதியில் களவாடப்பட்டிருந்த போதிலும் குறித்த விடயம் தொடர்பாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக் காமையுடன் குறித்த இழப்பு தொடர்பாக பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப அறிக்கை கிடைக்கப் பெற்ற மேலதிக நடவடிக்கை களுக்காக முதலமைச்சுக்கு அனுப்பட்டுள்ளது. | மேற்படி |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **அரச உத்தியோகத்தர் விடுதி** | | |
| (i) | நகரசபைக்குச் சொந்தமான 69 இல்லங்களுக்கான சொத்துப் பதிவேடு பேனப்படவில்லை. மேலும் வாடகையை அறவிடுவது தொடர்பாக ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இவ்விடுதிகளில் பாவனைக்கு உதவாத விடுதிகள் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துப்பதிவேடு பேணப்பட்டு இற்றைப்படுத்துவத ற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (ii) | புனித அந்தோனியார் வீதியில் அமைந்துள்ள உத்தியோகத்தர்களுக்கான விடுதி இல 19 ஆனது 2005 ஆம் ஆண்டிலிருந்து தற்போதைய கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் அவருடன் எதுவித உடன்படிக்கையும் மேற்கொள்ளப் படாததினால் ரூபா 1,699,772 தொகையான வாடகை இழக்கப்பட்டுள்ளது. | விடுதி தொடர்பாக முதலமைச்சு மற்றும் கல்வி அமைச்சுடன் தொடர்கொண்டு உடன்படிக்கை மற்றும் வாடகைப்பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | 05 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 72,798,344 தொகையான வைப்புக்கள் தொடர்பில் உரிய நபர்களுக்கு செலுத்துவதற்கோ அல்லது அரசிறைக்கு மாற்றுவதற்கோ சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வைப்புத் தொகையானது நிகழாண்டில் வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நகரசபைக்குச் சொந்தமான 126 கடைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.இதனால் சபைக்கு கூட்டு மொத்தம் ரூபா 22,793,053 தொகை வருமானம் இழக்கப்பட்டுள்ளது. | அக்கடைகளை மாற்றியமைப் பதற்கான நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் எடுக்கபட்டு குத்தகைக்கு வழங்கப்படும். | கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (ஆ) | சுற்றுலா பயிற்சி நிலையம் அமைப்பதற்கு 2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 10 மில்லியன் பெறுமதியான பொருட்கள் பெறப்பட்டிருந்தும் இன்றுவரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றன. | சுற்றுலா பயிற்சி நிலையத்தின் நிர்மாணிப்பு பணிகள் முடிவடைந்ததும் பொருட்களானது உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படும். | உரிய நோக்கத்தினை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வைத்தியசாலை கழிவுகளை எரியூட்ட பொருத்தப்பட்ட ரூபா 5,695,830 பெறுமதியான இயந்திரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பயன் படுத்தப்படாது காணப்படுகின்றது. | குறித்த இயந்திரமானது பொருளாதார ரீதியில் திருத்துதல் மற்றும் பாவனை செய்தல் வினைத்திறன் அற்றதாக காணப்படுகின்றது. | உரிய நோக்கத்தினை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | மத்திய சந்தைக் கட்டட கடைத்தொகுதியிலுள்ள 48 கடைகள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்பாடற்றுக் காணப்படுகின்றது. | எதிர்வரும் காலங்களில் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | நகர சபைக்குரிய 40 வாகனங்கள் நீண்டகாலமாக பாவனைக்குட்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற போதிலும் அதனை அகற்றுவதற்கு அல்லது ஏல விற்பனை செய்வதறகு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | Valuation Report கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இவ்வாகனங்களை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப நிலை மட்டத்தில் 74 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தில் 44 பதவி வெற்றிடங்களும், சிரேஸ்ட மட்டத்தில் 02 பதவி வெற்றிடமுமாக மொத்தமாக 120 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை தொடர்ச்சியாக எடுக்கப்படுகின்றது. | பற்றாக்குறையை தீர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | சபையின் செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகள் 07 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அவற்றிற்கு இலங்கை நிர்வாக சேவை மற்றும் இலங்கை கணக்காளர் சேவையில் உள்ளவர்கள் நியமிக்கப் பட்டிருக்கவில்லை. | மேற்படி | பற்றாக்குறையை தீர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) | பதவியனியினருக்கான கடன் பதிவேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிலுவை மீதிகளில் இனங் காணப்படாத ஊழியர்களது கடன் நிலுவை ரூபா 500,752 தொகை காணப்படுகின்றது.இதனை அறவீட சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிகழாண்டில் மேற்குறிப்பிட்ட தொகைக்கும் சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிலுவையினை தீர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 1971 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளாக நான்கு இலக்குகளை இனங்காணப்பட்டிருந்ததுடன், வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தி அடையக்கூடிய ஏனைய குறிக்கோள்களை இனங்கண்டு அவற்றினை பௌதீக ரீதியாக அடைந்து கொள்ளக் கூடியவாறு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2030 ஆண்டில் அடையப் பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |